**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.1164/2023

பி.வா.சா.2 நேருராஜா த/பெ நோயல்

<u>**வாதி தரப்பு குறுக்குவிசாரணை :–**</u>

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்க்கு எவ்வித அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்என்றால் சரிதான். வாதிக்கும், பிரதிவாதிக்கும் என்ன வரவு,செலவு கணக்குகள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. பிரதிவாதியின் கணவர் எனக்கு நண்பர் ஆவார். பவானி காமராஜ் நகரில் பிரதிவாதி அவருடைய கணவர் மற்றும் குழந்தைகள் ஒரே குடும்பமாக வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை. பிரதிவாதியின் காசோலையை தன்னுடைய கணவர் எடுத்து சென்றுவிட்டதால் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரதிவாதியும், அவருடைய கணவரும் தனித்து வாழ்ந்து வருகிறார்கள். கடந்த 5 ஆண்டுகளாக மேற்கண்ட இருவரும் பிரிந்து வாழ்கிறார்கள்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. ஈரோடு குற்றவியல் விரைவு நீதிமன்றம் –1ல் பிரதிவாதி காசோலை வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி கேட்டுக்கொண்டதன் பெயரில் நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை–இல்லை